## ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)

An Unit of the e magazine Voice of Jagadguru)

## ஸ்ரீ சிருங்கேரீ சாரதாபீடம் மஹாசந்நிதானம் ஸ்ரீஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகள் அருளுரை

**கோபத்தைத் துறந்து, பிறருக்கு உதவுங்கள், உங்கள் வாழ்க்கையை மேன்மைப்படுத்துங்கள்**

வாழ்க்கையில் மனிதனின் உண்மையான பெரும் எதிரிகள் ஆசையும் (காமம்) கோபமும் (குரோதம்) ஆகும். அவற்றைக் கட்டுப்படுத்தாத ஒருவருக்கு மன அமைதியும் மகிழ்ச்சியும் இருக்காது. கட்டுப்பாடற்ற கோபத்தால், அவன் தன்னையும் மற்றவர்களையும் காயப்படுத்துவான்.



சிலருக்கெல்லாம் கோபம் என்பது ஒரு கணநேரமே நீடிக்கும். அவர்கள் உன்னதமான (உத்தம) நபர்கள் என்றும் அழைக்கப்படலாம். வேறு சிலருக்கு, கோபம் அரை நாள் நீடிக்கலாம். அவர்கள் அதை மேலும் குறைப்பது நல்லது.

## ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)

An Unit of the e magazine Voice of Jagadguru)

ஜகத்குரு சங்கராச்சாரிய ஸ்ரீ ஸ்ரீ பாரதீ தீர்த்த மகாசன்னிதானம், செப்டம்பர் 14, 2026 அன்று சிருங்கேரியில் உள்ள குரு நிவாஸில் மகாகணபதி பெருமானுக்கு ஒரு சிறப்புப் பூஜை செய்தார்.

சிலர் இரவும் பகலும் கோபமாக இருப்பார்கள். அவர்கள் அதாம (தாழ்ந்த) வகையைச் சேர்ந்தவர்கள். வேறு சிலருக்கு கோபம் ஒருபோதும் தணிவதில்லை. பழிவாங்கும் சாக்கில் அவர்கள் தங்கள் வாழ்நாள் முழுவதும் கோபத்தை வளர்த்துக் கொண்டிருப்பார்கள். மற்றவர்களை மன்னிக்க மாட்டார்கள். அவர்கள் பாபிஷ்தா (பாவி) என்று அழைக்கப்படுகிறார்கள். இத்தகைய கோபம் கோபக்காரனையே அழித்துவிடும்.

**उत्तमस्य क्षणं कोपो मध्यस्य प्रहरद्वयम् ।**

**अधमस्य त्वहोरात्रं पापिष्ठो नैव मुच्यते ॥**

உத்தமஸ்ய க்ஷணம்' கோபோ மத்$^4$யஸ்ய ப்ரஹரத்$^3$வயம் .

அத$^4$மஸ்ய த்வஹோராத்ரம்' பாபிஷ்டோ$^2$ நைவ முச்யதே ..

மறுபுறம், சிலர் மற்றவர்களின் துக்கத்தில் அனுதாபப்படுவார்கள் மற்றும் பாதிக்கப்பட்ட நபர்களுக்கு சாத்தியமான எல்லா வழிகளிலும் உதவ முயற்சிப்பார்கள். பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவ அவர்கள் ஒவ்வொரு வாய்ப்பையும் பயன்படுத்துவார்கள். நம் முன்னோர்கள் அவர்களை உன்னத மனிதர்கள் என்று போற்றியுள்ளனர்.

**उत्तमानां स्वभावोऽयं परदुःखासहिष्णुता ।**

**स्वयं दुःखं च संतापं मन्यतेऽन्यस्य वार्यते ॥**

உத்தமானாம்' ஸ்வபா$^4$வோ(அ)யம்' பரது$^3$:கா$^2$ஸஹிஷ்ணுதா .

ஸ்வயம்' து$^3$:க$^2$ம்' ச ஸந்தாபம்' மன்யதே(அ)ன்யஸ்ய வார்யதே ..

எனவே, ஒவ்வொரு தனிமனிதனும் ஆசையையும் கோபத்தையும் படிப்படியாகக் கைவிட வேண்டும். மீண்டும், ஒருவர் மற்றவர்களின் துக்கத்தைப் புரிந்துகொண்டு, முடிந்த உதவிகளைச் செய்ய முன்வர வேண்டும். அனைவரும் இதைத் தெளிவாகப் புரிந்துகொண்டு அதற்கேற்ப செயல்பட வேண்டும் என நாங்கள் வாழ்த்துகிறோம்.

ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)
An Unit of the e magazine Voice of Jagadguru)

# ஜகத்குரு ஸ்ரீ ஸச்சிதாநந்த சிவாபிநவ நரஸிம்ஹ பாரதீ மஹாஸ்வாமிகளின் திவ்ய சரித்திரம்

## 10. காலடி கும்பாபிஷேகம்

ஸாயங்காலம் ஸ்ரீமடத்தின் முன்னிலையில் ஸ்ரீமத் ஆசார்யார் பீடத்தில் அமர்ந்து ஸ்ரீமத் சங்கரபகவத்பாதாசார்யாருடைய மஹிமையைப்பற்றி விஸ்தாரமாக எடுத்துச் சொல்லி, இனி இந்த க்ஷேத்திரத்தில் எல்லா சிஷ்யர்களும் அடிக்கடி வந்து தர்சித்து கிருதார்த்தர்களாக வேண்டுமென்று ஆக்ஞாபித்தார்கள். இந்த க்ஷேத்திர நிர்மாணத்தில் இரண்டு வருஷ காலமாய் மிகவும் ஊக்கத்துடன் பிரயாஸைப்பட்டு குருபக்தியைக் காட்டின ஏ.ராமசந்திரய்யருக்கு "குருபக்த கேஸரி" என்ற பட்டம் கொடுத்து இரத்தினங்களிழைத்த ருத்ராக்ஷகண்டி, சால்வை முதலானவைகளால் ஸம்மானித்தார்கள். அவருக்கு மிகவும் உபகாரமாயிருந்து தன் சில்ப வித்யையை குருஸேவையில் உபயோகப்படுத்திய இ.ஆர். ஸுப்பராயரையும் சிலாகித்து அனுக்ரஹித்தார்கள். தன் ஆக்ஞையை சிரஸாவஹித்து வெகு அழகான ரீதியில் ஸ்ரீ சங்கர கிரந்தாவளியை அச்சிட்டு அன்று ஸமர்ப்பணம் செய்த ஸ்ரீரங்கம் ஸ்ரீ வாணீ விலாஸ் பிரஸ் அத்யக்ஷரான டி.கே. பாலஸுப்ரஹ்மண்ய அய்யருடைய பிரயத்னத்தை மிகவும் சிலாகித்து அனுக்ரஹம் செய்தார்கள். குருபக்தசிகாமணி என்ற பட்டத்தையும் ருத்ராக்ஷ கண்டி சால்வைகளையும் பின்னால் அவர்களுக்குக் கொடுத்தார்கள்.



கும்பாபிஷேக தினத்தன்று கூடியிருந்த ஜனங்கள் கணக்கிலகப்படா. இந்தியாவிலுள்ள பல பாகங்களிலிருந்தும் ஏராளமாய் வந்திருந்தார்கள். மைசூர் சிவகங்கா மடாதிபதிகளான ஸ்ரீ ஸுப்ரஹ்மண்ய அபிநவ ஸச்சிதானந்த பாரதீஸ்வாமிகள், சிதம்பரம் மஹா மஹோபாத்யாய ஹரிஹர சாஸ்திரிகள், மைஸூர் திவான் வி.பி. மாதவராவ், திருவனந்தபுரம் திவான் ஸர் பி. ராஜகோபாலாசாரியார், மைசூர் கௌன்சில் மெம்பர் ஹெச்.வி நஞ்சுண்டய்யா முதலான லௌகிக வைதிக ஜனங்கள் வந்திருந்தார்கள். கும்பாபிஷேகம் நடந்த பிறகு சுமார் மூன்று மாத காலம் ஸ்ரீமத் ஆசார்யார் காலடியிலேயே வாஸம் செய்து ஆசார்ய தர்சனம் செய்து கொண்டு, தர்சனார்த்தம் வரும் சிஷ்யர்களை அனுக்ரஹித்துக் கொண்டு ஆனந்தமாக இருந்து வந்தார்கள். இதன் மத்தியில் மஹாவித்வானாயிருந்த கொச்சி மஹாராஜா அவர்களும், அந்தரங்க பக்தரான மைசூர் மஹாராஜா அவர்களும் வந்து மூர்த்திகளையும் ஆசார்யாரையும்

## ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)

An Unit of the e magazine Voice of Jagadguru)



தர்சனம் செய்து அனுக்ரஹம் பெற்றுக்கொண்டார்கள். காலடியில் ஶ்ரீமத் ஆசார்யார் ஏகாந்தமாயிருந்த காலத்தில் மந்திரோபதேசங்களையும், ஹிதோபதேசங்களையும், பாஷ்யாதி கிரந்தோபதேசங்களையும் பெற்று கிருதார்த்தர்களானவர்கள் அளவற்றவர்கள். பிறகு கிராம ரக்ஷைக்காக ஓர் அச்வத்த விருக்ஷத்தில் ஆஞ்சநேயரையும், அசோக விருக்ஷத்தில் கார்த்தவீர்யார்ஜுனரையும் ஆவாஹநம் செய்து, சனி, வியாழன் தினங்களில் பூஜை செய்யும்படி ஆக்ஞை செய்துவிட்டு, அவ்விடத்து விசாரணைப் பொறுப்பை வஹித்து அங்கேயே வாஸம் செய்யும்படி ஏ.ராமசந்திரய்யரை நியமனம் செய்துவிட்டு, காலடியிலிருந்து புறப்பட்டுவிட்டார்கள்.

## 11. சிருங்கேரிக்குத் திரும்புதல்

அங்கிருந்து கிரமமாக சென்னை ஹைகோர்ட் ஜட்ஜ் பி.ஆர். ஸுந்தரம் அய்யருடைய பிரார்த்தனைக்கு இணங்கி அவர் கிராமமான புதுக்கோடுக்கு விஜயம் செய்து அவர் கிருஹத்திலேயே அவ்வருஷ ஶ்ரீ சங்கர ஜயந்தீ மஹோத்ஸவத்தை நடத்தி, அங்கிருந்து புறப்பட்டு கோயம்புத்தூர், நாமக்கல் மார்க்கமாக ஸாதாரண வருஷத்திய சாதுர்மாஸ்ய ஸங்கல்பத்தை யுத்தேசித்து காவேரி வடகரையிலுள்ள அய்யம்பாளையத்திற்கு விஜயம் செய்தார்கள். அந்த ஸமயம் சாதுர்மாஸ்ய ஸங்கல்பத்தை நடத்தி, தாண்டவராய பிள்ளையின் குருபக்தியையும் ஈசுவர பக்தியையும் கொண்டாடி அவருக்கு "பக்த ரத்னம்" என்ற பட்டம் கொடுத்து அனுக்ரஹித்து விட்டு, அங்கிருந்து புறப்பட்டு, சேலம், தர்மபுரி, கிருஷ்ணகிரி மார்க்கமாய் மைசூர் ஸம்ஸ்தானத்தைச் சேர்ந்த கோலார் ஜில்லாவில் பிரவேசித்தார்கள். அந்த ஸமயம் அங்கு டிப்டி கமிஷனராகவிருந்த ஸி.ஶ்ரீ கண்டேசுவரய்யர் ஶ்ரீஸ்வாமிகளிடத்தில் விசேஷ பக்தி சிரத்தையுடன் தன் ஜில்லாவில் அவர்களை நாற்பத்தியாறு தினங்கள் நிறுத்திக்கொண்டு உயர்ந்த ரீதியில் உபசரித்து அவர்களுடைய பிரஸாதத்தைப் பெற்றுக் கொண்டார். சிக்க பள்ளாபுரத்திற்கு ஸமீபத்திலுள்ள நந்தீபெட்டம் என்கிற பர்வதத்திற்கு பால்யத்தில் தன் குருநாதருடன் போன ஞாபகத்தில் இப்பொழுதும் போகவேண்டுமென்று ஶ்ரீஸ்வாமிகள் நினைத்ததும் அதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்பட்டன. அங்கு விஜயம் செய்து அங்குள்ள அமிர்தஸரோவரத்தில் ஸ்நானம் செய்து ஜலத்திற்கு ஸமீபத்திலேயே கௌபீனம் மாத்திரம் தரித்துக்கொண்டு சரீரமெல்லாம் விபூதி பூசிக்கொண்டு தன் அனுஷ்டானங்களை முடித்துக்கொண்டு ஸாயங்காலம் வரை தியானத்திலிருந்து விட்டார்கள். ஜலம் அதிசீதமாயிருந்த காரணத்தினால் இரவில் மார்பில் வலியேற்பட்டது. சிக்க பள்ளாபுரத்திற்கு வந்து சிலநாள் தங்கி இளைப்பாறிக் கொண்டு பெங்களூர் விஜயம் செய்தார்கள்.(தொடரும்…)

**ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)**
An Unit of the e magazine Voice of Jagadguru)

# ॥ श्रीसुब्रह्मण्यभुजङ्गम् ॥
## ||ஶ்ரீ ஸுப்3ரஹ்மண்ய பு4ஜங்க3ம் ||

### (அ) ஸ்கந்தருடைய சிரஸை வணங்குகிறார்

सुताङ्गोद्भवो मेऽसि जीवेति षड्धा जपन्मन्त्रमीशो सुदा जिघ्रते यान् ।
जगद्धारसृद्भयो जगन्नाथ तेभ्यः किरीटोज्ज्वलेभ्यो नमो मस्तकेभ्यः ।। १६ ।।
ஸுதாங்கோ3த்3ப4வோ மே(அ)ஸி ஜீவேதி ஷட்3தா4
ஜபன்மந்த்ரமீஶோ ஸுதா3 ஜிக்4ரதே யான் |
ஜக3த்3பா4ரஸ்ரு’த்3ப4யோ ஜக3ந்நாத2 தேப்4ய:
கிரீடோஜ்ஜ்வலேப்4யோ நமோ மஸ்தகேப்4ய: ||16||



**सुत** (ஸுத) - குழந்தாய்; **मे** (மே) - என்னுடைய; **अङ्गोद्भवः** (அங்கோ3த்3ப4வ:) - அங்கத் - திலிருந்து உண்டானவனாக; **असि** (அஸி) - இருக்கின்றாய்; **जीव** (ஜீவ) - நீடூழி வாழ்வாயாக; **इति** (இதி) - என்ற; **मन्त्रं** (மந்த்ரம்’) - மந்திரத்தை; **षड्धा** (ஷட்3தா4) - ஆறு தடவை; **जपन्** (ஜபன்) - ஜபித்துக்கொண்டு; **ईशः** (ஈஶ:) - உலகைக் காக்கும் சிவபெருமான்; **यान्** (யான்) - எந்த சிரசுகளை; **मुदा** (முதா3) - மகிழ்ச்சியுடன்; **जिघ्रते** (ஜிக்4ரதே) - முகர்கின்றாரோ; **जगन्नाथ** (ஜக3ந்நாத2) - உலகைக்காக்கும் முருகப் பெருமானே; **तेभ्यः** (தேப்4ய:) - அந்த; **जगद्धार** (ஜக3த்3பா4ர) - உலகங்களின் பாரத்தை; **भृद्भ्यः** (ப்4ரு’த்3ப்4ய:) - தாங்குகின்றவைகளும்; **किरीटोज्ज्वलेभ्यः** (கிரீடோஜ்வலேப்4ய:) - கிரீடங்களால் ஜ்வலிக்கின்றவைகளுமான; **मस्तकेभ्यः** (மஸ்தகேப்4ய:) - மத்தகங்களுக்கு; **नमः** (நம:) - வணக்கம்.

புத்ரன் தந்தையின் அங்கங்களிலிருந்து உண்டா अङ्गादङ्गात् सम्भवसि முதலான மந்திரங்கள் கூறுகின்றன. குழந்தை பிறந்தவுடன் தகப்பனார் தன் மகன் நீடூழி வாழ்வதற்காகச் சில மந்திரங்களைச் சொல்லி உச்சிமுகர்ந்து களிப்பெய்துகின்றார். அதுபோலவே உலகத்திற்கு வழிகாட்டியான சிவபெருமானும் தன் புத்ரனான ஆறு முகன் நீண்டகாலம் வாழவேண்டுமென்று ஆசி கூறுகின்றார். தன் மகனின் ஒவ்வொரு சிரஸையும் முகரும்பொழுதும் அவர் மந்திரத்தை ஒருதடவை உச்சரிக்கின்றார். இவ்வாறு ஆறு தடவை மந்திரம் ஓதி ஆறு சிரஸ்ஸுகளையும் முகர்ந்து அளவற்ற மகிழ்ச்சி பெறுகின்றார். ஈசன் உலகைக் காக்கும் வல்லமை வாய்ந்தவன். அதுபோலவே

## ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)

An Unit of the e magazine Voice of Jagadguru)

ஈசபுத்திரனும் ஜகத்தை ரக்ஷிக்கின்றான். आत्मा वै पुत्रनामासि என்று மறைகள் பறைசாற்றவில்லையா? குமரனும் ஈசனும் ஒன்று அல்லவா? ஆதலால் உலகின் பாரத்தை உத்தம புத்திரனான குமரன் தனது ஆறு சிரஸுகளாலும் தாங்குகின்றான். அவனுடைய சிரஸுகளில் ரத்னங்கள் பதிப்பிக்கப்பட்ட மகுடங்கள் விளங்குகின்றன. அவனுடைய சிரஸுகளை வணங்கினால் நம்மைக் காக்கும் பொறுப்பையும் அவனே ஏற்றுக்கொள்வான் **(16)**

**(அ) அங்கங்களை தனித் தனியாக வர்ணித்துவிட்டு முழு உருவத்தையும் தியானிக்கிறார்**

स्फुरद्रत्न केयूरहाराभिराम-श्चलकुण्डलश्रीलसद्गण्डभागः ।
कटौ पीतवासाः करे चारुशक्तिः पुरस्तान्ममास्तां पुरारेस्तनूजः ॥ १७ ॥
ஸ்பு$^{2}$ரத்$^{3}$ரத்ன கேயூரஹாராபி$^{4}$ராம-ஸ்சலகுண்ட$^{3}$லஶ்ரீலஸத்$^{3}$க$^{3}$ண்ட$^{3}$பா$^{4}$க$^{3}$: |
கடௌ பீதவாஸா: கரே சாருஶக்தி: புரஸ்தான்மமாஸ்தாம்' புராரேஸ்தனூஜ: ||17||

**स्फुरत्** (ஸ்பு$^{2}$ரத்) **-** ஜ்வலிக்கின்ற; **रत्न** (ரத்ன) **-**ரத்னங்கள் பதித்த; **केयूर** (கேயூர) **-** தோள்வளை; **हार** (ஹார) **-** முத்துமாலை இவைகளால்; **अभिरामः** (அபி$^{4}$ராம:) **-** மனதைக் கவருகின்றவரும்; **चलत्** (சலத்) **-** அசைகின்ற; **कुण्डलश्री** (குண்ட$^{3}$லஶ்ரீ) **-** குண்டலங்களின் அழகினால்; **लसत्** (லஸத்) **-** விளங்குகின்ற; **गण्डभागः** (க$^{3}$ண்ட$^{3}$பா$^{4}$க$^{3}$:) **-** கன்னப் பிரதேசங்களை உடையவரும்; **कटौ** (கடௌ) **-** இடுப்பில்; **पीतवासाः** (பீதவாஸா:) **-** பொன்னிறமான ஆடையை உடையவரும்; **करे** (கரே) **-** கையில்; **चारूशक्तिः** (சாரூஶக்தி:) **-** அழகிய சக்தி என்ற ஆயுதத்தைத் தாங்கியவருமான; **पुरारेः** (புராரே:) **-** த்ரிபுரர்களை அழித்த சிவபெருமானின்; **तनूजः** (தனூஜ:) **-** குமாரன்; **मम** (மம) **-** என்னுடைய; **पुरस्तात्** (புரஸ்தாத்) **-** முன்னிலையில்; **आस्तात्** (ஆஸ்தாத்) **-** இருக்கட்டும்.

முன் சுலோகங்கள் பாதத்திலிருந்து ஆரம்பித்து சிரஸு வரையில் திருமுருகனின் திருஉருவத்தை வர்ணித்தன. இங்கு அவரது பீஷணமாயும் ரமணீயமாயுமுள்ள வடிவம் சித்தரித்துக்காட்டப்பட்டுள்ளது. முருகன் ஜ்வலிக்கின்ற ரத்னங்கள் பதித்த தோள்வளைகளையணிந்துகொண்டிருக் கின்றார். நல்ல முத்துமாலைகள் அவரது மேனியை வசீகர முள்ளதாகச் செய்கின்றன. அவரது காதுகளில் விளங்கும் குண்டலங்களின் ஒளி கன்னங்களில் பரவி அவரது முகத்தை மிகவும் பொலிவு பெறச்செய்கின்றன. அவருடைய இடையைப் பொன்னிறமுடைய ஆடை அலங்கரிக்கின்றது. இவ்வாறு குமரக்கடவுளின் திருஉருவம் பக்தர்களைப் பரவசப் படுத்துகின்றதாக விளங்குகின்றது. ஆயினும் கரத்தில் தோன்றும் சக்தி என்ற ஆயுதம் மிகுந்த அச்சத்தை உண்டுபண்ணுகின்றது. இவ்வாறான மூர்த்தியை த்யானிப்பதால் ஸகல சத்ரு பயமும் நீங்கி நன்மை பெறலாம். (17)

(தொடரும்...)

ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)
An Unit of the e magazine Voice of Jagadguru)

# सन्ध्यावन्दनम्

## ஸந்த்⁴யாவந்த³னம்

[சிருங்கேரி ஜகத்குரு ஸ்ரீ அபிநவ வித்யாதீர்த்த மஹாஸ்வாமிகள் அருளிய விளக்கங்களுடன்]

## காயத்ரீயின் மஹிமை



**नो देवतासु जडिमा जडिमा मनुष्ये (माधवीयशंकरविजय २.४७)**

நோ தே³வதாஸு ஜடி³மா ஜடி³மா மனுஷ்யே (மாத⁴வீயஶங்கரவிஜய 2.47)

"தேவதைகளில் ஜடத்தன்மை இல்லை. மனிதனில்தான் ஜடத் தன்மை இருக்கின்றது" என்று சொல்லப்பட்டிருக்கிறது.

**காயத்ரீயின் சிறப்பு:**

எண்ணற்றிருக்கும் மந்த்ரங்களில் மிகவும் சிறப்பு வாய்ந்தது காயத்ரீ மந்த்ரம் ஆகும்.

**भिद्यते हृदयग्रन्थिश्छिद्यन्ते सर्वसंशयाः । क्षीयन्ते चास्य कर्माणि तस्मिन्दृष्टे परावरे ।। (मुण्डकोपनिषद् २.२.८)**

பி⁴த்³யதே ஹ்ரு’த³யக்³ரந்தி²ஶ்சி²த்³யந்தே ஸர்வஸம்’ஶயா: |

க்ஷீயந்தே சாஸ்ய கர்மாணி தஸ்மிந்த்³ரு’ஷ்டே பராவரே || (முண்ட³கோபநிஷத்³ 2.2.8)

"காரண வடிவாகப் பரமாகவும், காரிய வடிவாக அபரமாகவும் இருக்கும் (பரம்பொருளான) அதைக்கண்டவுடன் (பார்த்தவனது) இதய முடிச்சுகள் (ஆசைகள்) அறுக்கப்படுகின்றன. எல்லாச் சந்தேகங்களும் தீர்கின்றன. புண்ய பாப கர்மாக்களும் அழிந்து விடுகின்றன" என்கிற ஶாஸ்த்ர உபதேசங்களாலும்,

**मामुपेत्य पुनर्जन्म दुःखालयमशाश्वतम् । नाप्नुवन्ति महात्मानः संसिद्धिं परमां गताः ॥ (भगवद्गीता ८.१५)**

மாமுபேத்ய புனர்ஜன்ம து³:கா²லயமஶாஶ்வதம் |

நாப்னுவந்தி மஹாத்மான: ஸம்’ஸித்³தி⁴ம்’ பரமாம்’ க³தா: || (ப⁴க³வத்³கீ³தா 8.15)

"என்னையடைந்து, மோக்ஷத்தைப் பெற்றுவிட்ட மஹாத்மாக்கள் நிலையில்லாததும் துன்பங்களின் இருப்பிடமானதுமான மறுபிறவியைப் பெறுவதில்லை" என்கிற கீதோபதேசத்தினாலும் எப்பொழுது ஜீவன் ஆத்மாவை

## ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)

An Unit of the e magazine Voice of Jagadguru)

அறிந்து கொள்வானோ அப்பொழுது தான் ஸம்ஸாரமானது அடியோடு அழிந்துவிட அவன் அளவற்ற ஆனந்தத்தையும் மறுபிறவியிலிருந்து விடுதலையையும் பெற்று, செய்ய வேண்டியதைச் செய்தவன் ஆவான்.

**तं त्वौपनिषदं पुरुषं पृच्छामि (बृहदारण्यकोपनिषद् ३.९.२६)**

தம்’ த்வௌபநிஷத$^3$ம்’ புருஷம்’ ப்ரு’ச்சா$^2$மி (ப்$^3$ரு’ஹதா$^3$ரண்யகோபநிஷத்$^3$ 3.9.26)

"உபநிஷத்துக்களிலிருந்து மட்டுமே அறியப்படக்கூடிய பரம்பொருளைப் பற்றிக் கேட்கிறேன்” என்கிற வேத வாக்கியம் ஆத்மாவை வேதாந்தம் மூலமாகத்தான் அறிந்துகொள்ள முடியும் என்று உறுதியாகத் தெரிவிக்கிறது.

வேதத்தினுடைய உபதேசத்தின் அர்த்தத்தை அறிந்து கொள்ள வேண்டுமானால் வேதத்தை அத்யயனம் செய்வது மிக அவசியம். யக்ஞோபவீதம் (பூணூல்) இல்லாதவனுக்கு வேதத்தை அத்யயனம் செய்வதற்குத் தகுதி இல்லாதபோது அவனுக்கு (உபநிஷத்துக்களான) வேதாந்தத்தை அத்யயனம் செய்ய அதிகாரம் இல்லை என்று சொல்லத் தேவையில்லை. வேதங்களின் உபதேசத்தை மனதில் வைத்துக்கொண்டு முனிவர்களால் எழுதப்பட்ட புத்தகங்களான ஸ்ம்ருதிகள் உபநயனமானது காயத்ரீ மந்த்ரோபதேசத்துடன்தான் செய்யப் பட வேண்டும் என்று உபதேசிக்கின்றன. (ஆகையால் காயத்ரீ உபதேசமிருந்தால் தான் உபநயனம். உபநயனத்திற்குப் பிறகே வேதாந்தத்தில் சொல்லப்பட்டிருப்பதை அறிந்து கொள்ளலாம். வேதாந்தத்தில் சொல்லப்பட்ட பரம்பொருளை அறிந்தால் தான் ஸம்ஸாரத்திலிருந்து விடுதலை என்பது கருத்து).

**கௌதம ஸூத்ரங்களில்**,

**प्रागुपनयनात्कामचारः कामवादः कामभक्षः ॥ (गौतमधर्मसूत्र १.२.१)**

ப்ராகு$^3$பநயநாத்காமசார: காமவாத$^3$: காமப$^4$க்ஷ: .. (கௌ$^3$தமத$^4$ர்மஸூத்ர 1.2.1)

**न ब्रह्माभिव्याहारयेत् … (गौतमधर्मसूत्र १.२.९)**

ந ப்$^3$ரஹ்மாபி$^4$வ்யாஹாரயேத் … (கௌ$^3$தமத$^4$ர்மஸூத்ர 1.2.9)

"உபநயனத்திற்கு முன்பு ஒருவன் தனக்கு எது விருப்பமோ அதைச் செய்யலாம். விருப்பப்படி பேசலாம். விரும்பியதைச் சாப்பிடலாம். அவனை அப்பொழுது வேதத்தைச் சொல்ல வைக்கக் கூடாது" என்று கூறப்பட்டுள்ளது.

(தொடரும்…)

**ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)**

An Unit of the e magazine Voice of Jagadguru)

# श्रीमन्नारायणीयम्

## ஶ்ரீமந்நாராயணீயம்

### अष्टमं दशकम्

**அஷ்டமம்' த³ஶகம் - பிரளயமும் சிருஷ்டியும்**

विबुध्य च त्वं जल गर्भशायिन् विलोक्य लोकानखिलान् प्रलीनान् ।

तेष्वेव सूक्ष्मात्मतया निजान्तः स्थितेषु विश्वेषु ददाथ दृष्टिं ।। ९

விபு³த்⁴ய ச த்வம்' ஜல க³ர்ப⁴ஶாயின் விலோக்ய லோகாநகி²லான் ப்ரலீனான் |

தேஷ்வேவ ஸூக்ஷ்மாத்மதயா நிஜாந்த: ஸ்தி²தேஷு விஶ்வேஷு த³தா³த² த்³ரு'ஷ்டிம்' .. 9

ஜலத்தின் கர்ப்பத்தில் — அதாவது பிரளயக் காலத்தில் நீரில் பள்ளிகொண்டிருக்கும் பரமாத்மாவே! விழித்தெழுந்து, அப்போது அனைத்து உலகங்களும் முழுமையாக ஒடுங்கியிருப்பதைக் கண்டாய். அந்த உலகங்கள் அனைத்தும் தத்தம் சூட்சும வடிவில் உனக்குள்ளேயே நிலைத்திருக்கின்றன என்பதை உணர்ந்து, அவற்றின் மீது உனது திருஷ்டியைச் செலுத்தினாய்.

ततः त्वदीयादयि नाभि रन्ध्रात् उदञ्चितं किञ्चन दिव्य पद्मम् ।

निलीन निःशेष पदार्थ माला संक्षेपरूपं मुकुलायमानम् ।। १०

தத: த்வதீ³யாத³யி நாபி⁴ ரந்த்⁴ராத் உத³ஞ்சிதம்' கிஞ்சன தி³வ்ய பத்³மம் |

நிலீன நி:ஶேஷ பதா³ர்த² மாலா ஸங்க்ஷேபரூபம்' முகுலாயமானம் ||10

அதன்பின்னர், பரமாத்மாவே! உனது நாபியின் துவாரத்திலிருந்து ஓர் அற்புதமான தெய்வீகத் தாமரை மேலெழுந்தது. பிரளய காலத்தில் ஒடுங்கியிருந்த எல்லாப் பொருள்களின் தொகுதியையும் தன்னுள் சுருக்கமாக அடக்கியுள்ளதுபோல், அந்தத் தாமரை மொட்டாக மலரத் தொடங்கியது.

तदेतदंभोरुह कुड्मलं ते कलेबरात् तोयपथे प्ररूढम् ।

बहिनिरीतं परितः स्फुरद्भिः स्वधामभिः ध्वान्तमलं न्यकृन्तत् ।। ११

## ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)

An Unit of the e magazine Voice of Jagadguru)

தேதே³தத³ம்போ⁴ருஹ குட்³மலம்’ தே கலேப³ராத் தோயபதே² ப்ரரூட⁴ம் |

ப³ஹிர்நிரீதம்’ பரித: ஸ்பு²ரத்³பி⁴: ஸ்வதா⁴மபி⁴: த்⁴வாந்தமலம்’ ந்யக்ரு’ந்தத் ||11

பரமாத்மாவே! உனது திருமேனியிலிருந்து, நீரின் மேல் தோன்றிய அந்தத் தாமரை மொட்டு, பின்னர் வெளிப்பட்டு உயர்ந்தது. அதிலிருந்து எல்லாத் திசைகளிலும் பிரகாசித்துக் கொண்டிருந்த தன்னுடைய ஒளிக்கதிர்களால், சுற்றிலும் இருந்த அறியாமை என்னும் இருளை முற்றிலும் நீக்கியது.

संफुल्लपत्रे नितरां विचित्रे तस्मिन् भवद्वीर्य धृते सरोजे ।

स पद्मजन्मा विधिराविरासीत् स्वयं प्रबुद्धाखिल वेदराशिः ।। १२

ஸம்பு²ல்லபத்ரே நிதராம்’ விசித்ரே தஸ்மின் ப⁴வத்³வீர்ய த்⁴ரு’தே ஸரோஜே |

ஸ பத்³மஜன்மா விதி⁴ராவிராஸீத் ஸ்வயம்’ ப்ரபு³த்³தா⁴கி²ல வேத³ராஶி: ||12

மிகவும் அழகாகவும் பலவிதமான சிறப்புகளுடன் கூடிய இதழ்கள் முழுமையாக மலர்ந்த அந்தத் தாமரையில், உனது தெய்வீக சக்தியினால் தாங்கப்பட்டு நிலைத்திருந்த அந்தத் தாமரையில், தாமரையில் பிறந்த பிரம்மதேவர் தோன்றினார். அவர் வேறு யாராலும் கற்றுக்கொடுக்கப்படாமல், அனைத்து வேதங்களின் ஞானமும் தாமாகவே விழித்தெழுந்தவராக அங்கே வெளிப்பட்டார்.

अस्मिन् परात्मन् ननु पाद्मकल्पे त्वमित्थमुत्थापित पद्मयोनिः

अनन्तभूमा मम रोग राशिं निरुन्धि वातालय वास विष्णो ।। १३

அஸ்மின் பராத்மன் நனு பாத்³மகல்பே த்வமித்த²முத்தா²பித பத்³மயோனி: |

அனந்தபூ⁴மா மம ரோக³ ராஶிம்’ நிருந்தி⁴ வாதாலய வாஸ விஷ்ணோ ||13

பரமாத்மாவே! பாத்மகல்பம் என்று அழைக்கப்படும் இந்தக் கல்பத்தில், இவ்வாறு உன்னால் நாபித் தாமரையிலிருந்து பிரம்மதேவர் தோன்றச் செய்யப்பட்டார். எல்லையற்ற மகிமையையும் பெருமையையும் உடையவனே! வாதாலயமான குருவாயூரில் எழுந்தருளியிருக்கும் விஷ்ணுவே! எனது நோய்களின் தொகுதி அனைத்தையும் நீக்கி அருள்வாயாக.

(தொடரும்..) Our Mail ID : Info@voiceofjagadguru.com

**ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)**

An Unit of the e magazine Voice of Jagadguru)

# श्री रुद्रप्रश्नः



## ஶ்ரீ ருத்³ரப்ரஶ்ன:

**(நமகம்)**

**निषङ्गिण इषुधिमते तस्कराणां पतये नमो नमो**

**निषङ्गिणे** (நிஷங்கிணே) — வாளை உடையவருக்கு / வாள் தரித்தவருக்கு; **इषुधिमते** (இஷு⁴திமதே) — அம்பறாத்தூணியை உடையவருக்கு / அம்புகள் நிறைந்த அம்பறாத்தூணியை உடையவருக்கு; **तस्कराणाम्** (தஸ்கராணாம்) — திருடர்களின் / களவாடுபவர்களின்; **पतये** (பதயே) — தலைவருக்கு / அதிபதிக்கு; **नमः** (**நம:**) — வணக்கம்; **नमः** (நம:) — மீண்டும் வணக்கம்

“வாளைத் தரித்தவரும், அம்பறாத்தூணியை உடையவரும், திருடர்களின் தலைவருமான உமக்கு மீண்டும் மீண்டும் வணக்கம்.”

**वञ्चते परिवञ्चते स्तायूनां पतये नमो नमो**

**वञ्चते** (வஞ்சதே) — வஞ்சிப்பவருக்கு / ஏமாற்றுபவருக்கு; **परिवञ्चते** (பரிவஞ்சதே) — முற்றிலும் வஞ்சிப்பவருக்கு / பலவிதமாக ஏமாற்றுபவருக்கு; **स्तायूनाम्** (ஸ்தாயூனாம்) — திருடர்களின் / களவாடுபவர்களின்; **पतये** (பதயே) — தலைவருக்கு / அதிபதிக்கு; **नमः** (நம:) — வணக்கம்; **नमः** (நம:) — மீண்டும் வணக்கம்

“வஞ்சிப்பவரும், பலவிதமாக வஞ்சிப்பவரும் ஆகிய திருடர்களின் தலைவருக்கு மீண்டும் மீண்டும் வணக்கம்.”

**निचेरवे परिचरायारण्यानां पतये नमो नमः**

**निचेरवे** (நிசேரவே) — மறைந்து திரிபவருக்கு / ஒளிந்து சென்று திரிபவருக்கு; **परिचराय** (பரிசராய) — சுற்றித் திரிபவருக்கு / இங்கும் அங்கும் சென்று திரிபவருக்கு; **अरण्यानाम्** (அரண்யானாம்) — காடுகளின்; **पतये** (பதயே) — தலைவருக்கு / அதிபதிக்கு; **नमः** (நம:) — வணக்கம்; **नमः** (நம:) — மீண்டும் வணக்கம்



# Voice of Jagadguru

advaitam paramanandam

an e-magazine on advaita



## ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)

An Unit of the e magazine Voice of Jagadguru)

“மறைந்து திரிபவரும், சுற்றித் திரிபவருமான, காடுகளின் தலைவருக்கு மீண்டும் மீண்டும் வணக்கம்.” (தொடரும்…)

Our Website link : https://www.voiceofjagadguru.com/

Telegram Channel : https://t.me/voiceofjagadguru

Instagram Channel :

https://www.instagram.com/stories/voice_of_jagadguru_voj/3601249542534134684?igsh=MW90YW13N2c5b2hqaA==

WhatsApp Community Channel: https://chat.whatsapp.com/Ly4wlaTu8Kc3sjjEYU8KGu

YouTube Channel : https://youtube.com/@jagad-guru-channel?si=brkLFqiz8sZJ6UIl

Facebook link : https://www.facebook.com/share/1Du5xkve4e/

For free e magazines : Our Mail ID : Info@voiceofjagadguru.com

| Editorial Board | | |
|---|---|---|
| Sri P A Murali | Hon’ Advisor | Administrator & CEO, Sri Sringeri Mutt & It’s Properties, Sringeri |
| Sri S N Krishnamurthy | Hon’ Editor | Sri Sringeri Mutt, Sringeri |
| Sri Tangirala Shiva Kumara Sharma | Hon’ Editor | Sri Sringeri Mutt, Sringeri |
| PujyaSri Swami Guruparananda | Hon’ Editor | Founder Acharya, Poornalaya & Mentor Sri Swami Chidbhavananda Ashram, Vedapuri, Theni. |
| Sri B Vijay Anand | Web Director | Coimbatore |
| Smt B Srimathi Veeramani | Web Asst Director & Chief Editor | Tirunelveli |
| K M Kasiviswanathan | Hon’ Editor | Tirunelveli |

ஜகத்குரு சங்கராசார்யர் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ மஹாஸந்நிதானம் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகள், ஜகத்குரு சங்கராசார்யர் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ ஸந்நிதானம் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ விதுசேகர பாரதீ மஹாஸ்வாமிகள் அவர்களின் பொற்பாதங்களில் சமர்ப்பிக்கிறோம்